201

11 APR 1932

Reg. No. M. 1534.

R. C. Training School Magazine, Trichinopoly.

திருச்சினுப்பள்ளி
திருக்குடும்பப் பாடசாலையில் மலரும்

போதனு விஷயப் பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்: வருஷ சந்தா ரூபாய் 1.

கொத்து 22	பெப்ருவரி 1932	மலர் 8

JE
ணா211, N11PP.
N32.22.8
182288

...கிராதிபர் குறிப்புகள்

...யில் சில மாதங்களுக்குமுன் புதிதாய் ...டிப்பு மசோதாவானது கனம் கவர்னர் ...திபெற்று சென்ற ஜனவரி மாதம் 19-ம் ...க்கு வந்துவிட்டது. இனி, ஜில்லாக்

கல்வி சவுன்சில்கள் புதுமாதிரி தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினரைக்கொண்டு, புது அதிகாரங்களுடன் நூதனப் பெயர் படைத்து வேலை துவக்கும். ஆரம்பப் படிப்பைப் பரப்புவதிலும் வரி கொடுப்போரின் பணத்தைப் பிரயோசனமாய் செலவு செய்வதிலும் இந்தப் புதுக் கமிட்டிகள் பழைய கவுன்சில்களைவிட அதிக அநுகூலம்பெறவேண்டுமென்று ஆசித்து வாழ்த்துகிறோம்.

* * *

புதுக் கமிட்டிகள் வேலை செய்யத்துவக்கும்போதே ஆரம்பக்கல்வி விர்த்திக்காக சர்க்கார் செய்யும் பண உதவியைக் குறைத்துப்போட்டது விசனிக்கத்தக்கதே. வேறே துறைகளில் குறைக்கவேண்டியதை ஈண்டு குறைத்தது விமரிசையற்ற செயல் எனினும் பள்ளிக்கூடங்களின் தாரதம்மியங்களை யதார்த்தமாய்ப் பரிசோதித்து அவைகளை நடத்துபவர்களின் உழைப்புக்கும் அவசியத்துக்கும் தக்கது பண உதவி செய்யப்படுமானால் ஆரம்பப் படிப்பு அதிகமாய் பின்னடையுமென்று சொல்வதற்கில்லை.

* * *

இத்தலி தேசத்துச் சர்வ கலாசாலைகளின் ஆசிரியர் அத் தேசத்தில் தற்போது பலமாயிருக்கும் பாசிஸ்டு (Fascist) கூட்டத்தாரின் அபிப்பிராயங்களுக்குப் பேதமான எதையும் போதிப்பதில்லையென்று வாக்குக்கொடுத்தால்தான் போதிப்பதற்கு அநுமதி பெறுவார்களாம். ஸ்பெயின் தேசத்தில் வேத அநுசரணையையொட்டிய எந்தக் கூட்டத்தாரும் முக்கியமாய் படித்துக் கொடுக்கும் தொழிலில் உலகப் பிரசித்திபெற்ற சேசுசபையாரும் பாடசாலைகளில் உபாத்திமாராய் இருக்கக்கூடாதாம். பாசிஸ்டுக் கூட்டதார் ஒரு தேசீகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்; வேத விரோதிகள் மாணிடப்பதர்கள். இவர்கள் அபிப்பிராயப்படி போதிப்பதும் இவர்கள் சொற்படி கேட்பதும் சுவாதீனமாம். இதுபோலவே இந்த இருபதாவது நூற்றாண்டில் மற்றச் சுவாதீனங்களும்!—ஆனால் நமக்குப் பழைய சுவாதீனம் போதும். நமது மனசாட்சிப்படி எது நமக்கு நன்மையோ, என்ன நன்மை நாம் நமது குழந்தைகளுக்கும் பிறருக்கும் செய்யக்கடமையென்று எதார்த்தமாய்க் காண்போமோ, அதைக் கண்டுபிடித்து, அதற்காக உழைக்கும் சுதந்தரம்—இதுவே நாம் தேடவேண்டிய சுவாதீனம்.

* * *

11 APR 1932

சமீபத்தில் வேல்ஸ் (Wales) மகாணத்தில் ஒரு கத்தோலிக்குப் பாடசாலை திறக்கும்படி ஷை மாகாணத்துக் கல்விக் கமிட்டியாரைக் கேட்டபோது அப்பாடசாலை அவசியமில்லை, அநுமதி கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்களாம். ஆனால் கல்விப்போர்டாருக்கு அப்பீல் செய்ததில் அப்பாடசாலை அவசியம் தானென்றும் திறக்கலாமென்றும் உத்தரவு கிடைத்ததாம். இனி பாடசாலைப் பிளான் எஸ்டிமேட்டு முதலியவை தயாரித்தனுப்பியபோது, ஷை கமிட்டியார் அவைகளைப் பிரித்துப் பார்க்கவும் மறுத்துவிட்டனராம். ஆகிலும் போர்டாரின் அநுமதியின் பேரில் பாடசாலை கட்டி முடித்துப் படிப்பும் ஆரம்பித்தாகிவிட்டது. இதையொட்டி மாகாணத்தில் வெகு கலவரமாம். என்? கத்தோலிக்கர் கல்வி வரி கொடுக்கவில்லையோ? அவர்கள் பிள்ளைகள் போதுமான தொகையாயிருக்கும்போது அவர்களை ஒன்று சேர்த்து அவர்கள் கொள்கைகளுக்கிசைவாயும் தேசீகக் கல்விச் சட்டங்களை அநுசரித்தும் படிப்பூட்டும் சுதந்தரம் அவர்களுக்கில்லையோ?

* * *

பூகோள சாஸ்திரப்படிப்பு இக்காலத்தில் அதிக முக்கியமான படிப்பாகக் கருதப்பட்டு வருவது சரியே. சிறுவர்கள் அறியவேண்டிய பொது விஷயங்களனைத்தையும் இந்தப் படிப்போடு சம்மந்தப்படுத்திவிடலாம். அறிவை விசாலப்படுத்துவதற்கு மாத்திரமன்று, பூகோளவாசிகளுள் பரஸ்பர நேசத்தை மூட்டவும் பரோபகாரச் செய்கைகளுக்குத் தூண்டவும் இந்தச் சாஸ்திரம் உதவும். நமது பாடசாலையில் இந்தச் சாஸ்திரத்தைக் கற்றுக்கொடுப்பவர்களுள் பிரதம ஆசிரியர் தமது அறிவும் அநுபோகமும் நமது நேயர்களுக்குப் பயன்படுமாறு தொடர்ச்சியாய் எழுதிக்கொண்டு வரும் வியாசங்களைக் கவனிக்க.

* * *

நமது பாடசாலையிலே ஏறக்குறைய இருபது வருஷம் வேலை பார்த்து அநுபோகமுள்ளவரும் பூங்கொத்தை வாங்கப் படிப்பவர்கள் அநேகருக்கு அறிமுகமுள்ளவருமான இன்னொரு ஆசிரியர் பரீட்சைகளின் தன்மையையும பிரயோசனத்தையும்பற்றி எழுதி வரும் வியாசமும் கவனிக்கத்தக்கதே. கேள்விகள் கேட்கும் திறமையும் பரீட்சைகளை தம் வேலைக்கு உதவிக்கொள்ளும் கெட்டிக்காரத்தனமும் ஆரம்ப ஆசிரியர்களுக்கு இன்றியமையாத சாதனமன்றோ?

* * *

182288

போதனுமுறைச் சர்க்கார் பரீட்சை அடுத்த மார்ச்சு மாதம் 10, 11, 12-ம் தேதிகளில் நடைபெறும். நமது பாடசாலை மாணவர் செக்கண்டரி கிரேடு : 38.

ஹையர் கிரேடு : 39.

லோவர் கிரேடு: 35.

இவர்களெல்லோரும் வேறு சிலரும் இவ்வருஷம் நமது பாடசாலையிலேயே சர்க்கார் பரீட்சை எழுதுவார்கள்.

*** *** ***

அடுத்த வருஷம் போதனுமுறை மாணவர்களுக்கு சர்க்கார் உதவும் உபகாரச்சம்பள விஷயமாய் திட்டமான ஏற்பாடு ஒன்றும் இன்னும் செய்தாகவில்லை.

பரீக்ஷைகளை ஒழித்துவிடுவதா? திருத்திவைப்பதா?

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

பரீக்ஷைகளைக் கண்டனஞ் செய்வோர், அது மாணுக்கர்களிடத்தில் ஒருவித பயத்தையுண்டாக்கி, அவர்களது தேகவலிமை, மனவலிமை, ஊக்கம், உற்சாகம் முதலியன குன்றிப்போகச் செய்துவிடுகின்றது என்று கூறுகின்றனர். உண்மையில் பரீக்ஷையென்ற பேச்சிலேயே மாணுக்கனுக்கு அச்சம பிறந்துவிடுகிறது. மாணுக்கன் வருஷ இறுதிப் பரீக்ஷையில் தேருவிடில் மேல் வகுப்புக்கு மாற இயலாது என்று ஆசிரியர் அடிக்கடி ஜெபித்துக் கொண்டிருக்கிருர். பரீக்ஷையைப்பற்றிப் பெரிதும் மிகைப்படக் கூறப்படுகிறது. பரீக்ஷையில் தேருவிடின் அநேக அபாயங்கள் விளைந்துவிடும் என வற்புறுத்தாத ஆசிரியர் வெகு சிலர். எனவே, மாணுக்கன் பரீக்ஷமட்டில் பயங்கொள்ளப் போதுமான காரணம் ஏற்படுகின்றது.

இந்தப் பயத்தினுல் பாடங்களைப் படித்துத் தன்னை பரீக்ஷக்குச் சித்தஞ் செய்துகொள்ளுகின்றுன். குருட்டுப்பாடம் செய்கின்றுன். கண்விழிப்பு ஏற்படுகிறது. மனப்பாடம் செய்ய வேண்டியது அவசியமாயினும், விவேகமற்ற குருட்டுப்பாடம் உட்புகுந்து விடுகின்றது. அனுவசியமாய் கண்விழித்தலால், மனச்சோர்வும் ஏற்படுகின்றது. சந்தோஷமும் திருப்தியும் இல்லை. சில சமயங்களில் பரீக்ஷ என்றுலே வெறுப்பாயும் இருக்கின்றது.

இவ்வித எண்ணங்களை மாற்ற ஆசிரியர் சில உபாயங்களைக் கையாளவேண்டும். நாளுக்கு நாள் மாணக்கன் பள்ளிக்கூடத்தில் செய்துவரும் வேலை நன்கு கவனிக்கப்படவேண்டும். பாடங்களில் அவனுக்குள்ள தேர்ச்சி அப்போதைக்கப்போது கணிக்கப்படுதல்வேண்டும்; படிப்பின் அபிவிருத்தி சுட்டிக்காட்டப்பட்டிருத்தல் வேண்டும். குறைகள் சீர்திருத்தப்பட்டிருத்தல்வேண்டும். இவைபோன்ற கவனிப்பும் கண்காணிப்பும் ஒழுங்காய் நடைபெற்றிருக்கவேண்டும். இவற்றையனுசரித்து பள்ளிக்கூட நாட்களில் மாணக்கன் செய்துள்ள வேலை ஆசிரியருக்குப் பொதுவாய் திருப்தியளிக்க வல்லதாயின், அவன் இறுதிப் பரீக்ஷையில் ஒருக்கால் தேறுவிடினும் மேல்வகுப்புக்கு அவனை மாற்றுவதில் தமக்கு ஆக்ஷேபனை அநேகமாய் இராது என்று ஆசிரியர் எடுத்துக்கூறுதல்வேண்டும். மாணக்கன் இதனையுணர்ந்து, பரீக்ஷையைப்பற்றிய பீதியை ஒருவாறு தணித்துக் கொள்ளக்கூடும்.

மேலும், சில ஆசிரியர் பரீக்ஷையையே குறியாகக்கொண்டு அதற்கிணங்க தமது போதனைகளைச் சரிக்கட்டுகின்றனர். இதனால் மாணக்கர்களிடத்தில் குருட்டுப்பாடம் செய்யும் வழக்கம் படிந்து விடுகிறது. ஆசிரியர் தம் போதனைகளைப் பரீக்ஷைக் கேள்விகளுக்கு விடை எழுதும் வகையிலே நடத்திக்கொண்டு போனால், பிள்ளைகளின் மனம் விசாலிப்பதற்கு இடமில்லை. கல்வியின் நோக்கம், மாணக்கனது அறிவையும் மனதையும் விரியும்படி செய்வதாய் இருத்தலால் பரீக்ஷையின் நோக்கமும் அதைச்சார்ந்தே நிற்றல் முறையாகும். ஆகவே பரீக்ஷையானது மாணக்கன் தான் படித்த படிப்பை உபயோகிப்பதற்கு வசதியுள்ளதான ஓர் சந்தர்ப்பமாயிருக்கின்றதென்பதை யுணரும்படி இருத்தல்வேண்டும்.

இதுபற்றியே சில பரீக்ஷ வினுத்தாளில் பல கேள்விகளைக் கொடுத்து சில கேள்விகளுக்கு மாத்திரம் விடைகள் வரைந்தால் போதும் என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. உதாரணமாக: 10 கேள்விகளுள் யாதேனும் 5 கேள்விகளுக்குமாத்திரம் விடை தருக எனல்.

அன்றியும், வருஷ முழுதும் மாணக்கன் கற்றறிந்த விஷயங்களனைத்தையும் ஒரு பரீக்ஷையின் மூலமாய், ஒரே மூச்சில், சோதித்துவிடுதல் கூடாத காரியம். ஒரு பரீக்ஷையில் குறிக்கப்பட்ட சில குறிப்பான வினுக்களுக்கு விடை பகரக்கூடாத மாணக்கன் அதில் விட்டுவிடப்பட்ட, அல்லது கேட்கப்படாத

ஏனை வினாக்களுக்கும் விடை பகர இயலாதவன் என்று தீர்மானங் கொள்வதும் கூடாத காரியம். சரியுமன்று. எனவே, பரீக்ஷை யானது மாணாக்கன் தான் படித்த படிப்பின் அறிவைக்கொண்டு வினாக்களுக்கு பதிலுரைக்கும் வகையில் அது அமையவேண்டும். அவ்வாறாயின், குருட்டுப்பாடத்தின் தீமையும், பரீக்ஷையைப் பற்றிய அச்சமும் ஒருவாறு குன்றக்கூடும்.

பரீக்ஷையானது மாணாக்கனது படிப்பின் தேர்ச்சியைமாத்திரம் சோதிப்பதாய் இருத்தல் பற்றாது அவனது மனோபாவங்களையும் கண்டறியத்தக்கதாய் இருப்பது நலம். பொருள் ஞானத்துடன், விவேகமும் அதிகரித்தல் வேண்டுமாதலின், கேள்விகள் வெகு சாமார்த்தியமாய் போடப்படுதல்வேண்டும். பாடங்களின் அறிவை அடிப்படையாக வைத்து, பொது ஞாயங்கள், விதிகள், நீதிகள் முதலிய கருத்துக்களை எடுத்துக்காட்டக் கூடிய விடைகளை எதிர்பார்த்தால் மாணாக்கனது மனது பரீக்ஷையின்பால் ஈடுபடுவதுமன்றி அதனையோர் சாதனமாகக்கொண்டு படிப்பிலும் பரீக்ஷையிலும் ஆவல் கொள்ளவுங்கூடும்.

பரீக்ஷைகளையே ஒழித்துவிடவேண்டுமென்று சாதிப்போரது கூற்று மற்றொன்றுளது: அதாவது மாணாக்கனுடைய சுய முயற்சியை அது பாழாக்கிவிடுகின்றதென்பதாம். மாணாக்கனுடைய சுய முயற்சியை வளர்க்கவேண்டின் பரீக்ஷையின் மெய்யான நோக்கத்தைப் பரீக்ஷிப்பவர் பரீக்ஷை செய்யவேண்டும். பரீக்ஷைக் கேள்விகள் உலக இயல்புக்கும், அநுபவத்திற்கும், ஜீவியத்திற்கும் ஏற்றவையாய் போடப்படுதல் வேண்டும். கேவலம் விஷய ஞானத்தை மாத்திரம் சோதிப்பதாய் அவையிருத்தல் பற்றாதெனக் கூறியாயிற்று. எனவே, பரீக்ஷை முறையில் மேற்கூறிய சீர்திருத்தம் ஏற்பட்டிருந்தால் மெச்சத்தகும். ஏற்பட்டிராவிடின் இனி ஏற்படுதல் வேண்டும். இதையனுசரித்தே பாடசாலைப் போதனையின் போக்கும் அமையவேண்டும். போதகமும், பரீக்ஷையும் இந்த இலக்ஷியத்தில் ஒத்துப்போகுமானால் கல்வியின் நோக்கமும் பரீக்ஷையின் பயனும் பலனை எய்தும். உலக ஜீவியப்ரசினையைத் தீர்க்க நம்மால் இயன்றமட்டும் நாம் கற்கும் கல்வியை, படிப்பை, உபயோகித்துக்காட்ட பரீக்ஷை காலம் ஏற்ற சந்தர்ப்பமாய் கிடைத்துள்ளதே! என்னே! இந்த நல்ல சந்தர்ப்பத்தில் நமது அறிவை ஒழுங்குப்படுத்தி நமது கருத்துக்களைத் தெளிவாய் வரிவடியாய்—விடை வாயிலாய் வெளிப்படுத்துவோம். அந்த பரீக்ஷைகாலம் நமது விருப்பத்திற்குரியது என்ற உணர்ச்சியைத் தூண்டவல்லதாக, பரீக்ஷை அமையு

மேல், மாணுக்கர்களிடை ஊக்கமும் உற்சாகமும் வளரும் என்ப தற்கு ஐயமில்லை.

இதுகாறும், பரீக்ஷைகளைப்பற்றிய குணதோஷங்களைனத்தும் எழுத்துப் பரீக்ஷைகளையே குறிக்கும். மேல் வகுப்பு மாணுக்கர்களைச் சார்ந்த காரியமாகும். கீழ்வகுப்புக்களில் ஆசிரியர் எழுத்துப் பரீக்ஷையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய இடமில்லை. அவசியமும் இல்லை. ஆகவே எழுத்துப் பரீக்ஷைகளை நடத்துபவர்கள் மேற்கூறியவாறு மாணுக்கர்களது புத்தியையும் மனதையும் வளர்க்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். கேவலம் வகுப்புமாற்ற உபயோகிக்கப்படும் ஓர் உபாயமாக அதனையாக்கிவிடக்கூடாது. மாணுக்கர்களை உலகத்திய ஜீவியப்ரச்னைகளைத் தீர்க்க அவர்களை யூககி அவர்களுடைய படிப்பையும் அறிவையும் ஆலோசனையையும் ஒழுங்காய் எடுத்துக்காட்ட அவர்களுடைய நன்மைக்காக அமைந்துள்ள ஏற்பாடே பரீக்ஷை என்று புலப்படுதல்வேண்டும். அவசியம் வேண்டும்.

T. S. Ganapathi Ayier, Teacher,
R. C. Boarding & Training School, Trichy.

பூகோளம் கற்பதனுலேற்படும் நன்மைகளும் பலன்களும்

நமது பாடசாலைகளில் பலவித பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அப்பாடங்கள் கற்பிக்கப்படுவதின் நோக்கம் பொதுவாக இரண்டு என்று சொல்லலாம்.

(1) அவை மனிதனுடைய வாழ்க்கைக்கு வேண்டிய சௌகரியங்களைத் தேடுவதற்கு உதவியாக இருப்பதன்றி அவ்வாழ்க்கையை மேன்மைப்படுத்துகின்றன.

(2) அவை மனிதனுடைய அறிவை வளர்க்கின்றன.

இவ்விரண்டு பலன்களும் பூகோளம் கற்பதினுல் ஏற்படுகின்றன.

" உலகத்திலுள்ள கிருஷிகன், வியாபாரி, தொழிலாளி, ஆசிரியன், ராஜ தந்திரி, போர்வீரன் ஆகிய யாவருக்கும் பூகோள சாஸ்திரத்தின் மூலாதார உண்மைகள் தெரிந்திருக்கவேண்டும். அவர்களுக்குத் தங்களைச்சுற்றி என்ன நடக்கிறது; தங்களுக்கு வேண்டிய பொருட்கள் எங்கு கிடைக்கின்றன; எவ்விதம் செய்யப்பட்டு, எதன்மூலமாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்

குக் கொண்டுவரப்படுகின்றன; என்று தெரிந்திருக்கவேண்டும். மேலும் பருவ காலங்கள் எவ்விதம் உண்டாகின்றன, அதற்குத் தகுந்தாற்போல், தாவரங்கள் எவ்வாறு பயிராகின்றன என்றும், சீதோஷ்ண ஸ்திதி, மழை முதலிய விஷயங்கள், ஏன் இடத்திற் கிடம் மாறுகின்றன; அதிலும் ஒரே இடத்தின் சீதோஷ்ண ஸ்திதி ஏன் காலத்துக்குத் தகுந்தபடி மாறுகின்றது, என்கிற விஷயங்களும் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டியது. ஆகையால் ஒரு நாட்டின் பிரஜை, தன் தொழில் எந்தவிதமாய் இருந்தாலும் மேலே கூறிய விஷயங்களை நன்றாய் அறிந்திருக்கவேண்டும். பூகோளம் படிப்பதால் அவ்விஷயங்கள் நன்றாக விளக்கப்படுகின்றன.

மேலும் சரித்திரம், ராஜீயநூல், பொருளபிவிருத்திநூல் முதலியவை கற்பதில் பூகோளம் மிகவும் உதவிபுரிகின்றது. ஒரு நாட்டின் தேச சரித்திரத்தை அறிவதற்கு அந்நாட்டின் பூகோளம் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். அந்நாட்டின் இயற்கையமைப்பு யாது? இயற்கை எல்லைகள் யாவை; அந்நாட்டின் சீதோஷ்ண ஸ்திதி, கைத்தொழில், ஜனங்கள், அவர்களின் தன்மை, குணம், நாகரீகம் இவைகள், எம்மாதிரியுள்ளனவென்று தெரிந்திருக்கவேண்டும். உதாரணமாக. இந்தியா தேச சரித்திரம் படிக்க ஆரம்பிக்குமுன், தேச சரித்திரத்தில் முதல் பாடமாக, இந்தியாவின் இயற்கையமைப்பையும், இமயமலை, கங்கைப் பள்ளத்தாக்கு, சற்பூரா மலைத்தொடர், தெற்கிலுள்ள கடல் இவற்றைப்பற்றியும் படிக்கிறோம். மேலும் ஒரு யுத்தம், படையெடுப்பு, முற்றுகை முதலியவற்றை நன்றாய்த் தெரிந்துகொள்ள அது நடந்த இடத்தின் இயற்கை அமைப்பு, எந்த விதமுள்ளதென்று தெரியவேண்டியிருக்கிறது. அவ்விதம் தெரிந்தால்தான் அங்கு நடந்த சரித்திர சம்பந்தமான விஷயம் நன்கு விளங்கும். ஆகையால்தான் ஒரு நாட்டின் தேச சரித்திரத்தை எழுதப்புகுமுன் அந்நாட்டுப் பூகோளத்தைப்பற்றி அவசியம் அறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது.

ஒரு நாட்டின் ராஜீய விஷயம் முழுவதும் பூகோள சம்பந்தமான காரியங்களைச் சார்ந்திருக்கிறது. ஒரு நாட்டுக்கும், மற்றொரு நாட்டுக்கும் ஏற்படும் சண்டையும் சமாதானமும் பூகோள சம்பந்தமானதே. ஆப்கானிஸ்தானத்திற்கும் இந்தியாவுக்கும் சமாதான உடன்படிக்கையும் ஏற்பட்டிருப்பது அந்நாட்டின் இருப்பிடத்தின் விசேஷத்தாலேதான். அந்நாட்டினர் நம் ராஜ்யத்தின் கோட்டைக்கு அடுத்தாற்போலிருக்கும் ஓர் கௌரவ காவற்காரர் போலுள்ளவர்கள். ஆகையால் அவர்களுக்கும் நமக்

கும் எப்போதும் சமாதானமே வேண்டும். ஸிங்கப்பூரை இப்போது ஒரு பெரிய ராணுவஸ்தலமாய்ப் பலப்படுத்துவதற்குக் காரணமாய் இருப்பது, அதன் பூகோள ரீதியாயுள்ள இட விசேஷமே. கிழக்கிலுள்ள ஆஸ்திரேலியா ஆங்கிலேயருக்கு முக்கியமான குடியேற்ற நாடு. அதன் பக்கத்தில் பெரிய வல்லரசுகளான ஜப்பான், அ. ஐ. மாகாணம், சீன முதலியவை இருக்கின்றன. ஆதலின் ஆங்கிலேயர் கிழக்குச் சமுத்திரத்தில் தங்கள் ஆதிக்கத்தை பலப்படுத்துவது இயல்பேயன்றோ! கொரியாவில் அகப்படும் விளைபொருள் காரணமாய்த்தான் அது ஜப்பான் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. தங்கள் கைத்தொழிலுக்கு, ஐரோப்பியர்களுக்கு இயற்கைப் பொருள் தேவையாய் இருப்பதின் காரணமாயும், தம் நாட்டில் அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு குடியேற விசாலமான நிலம் வேண்டியிருக்கும் காரணத்தாலேயும்தான் ஆப்பிரிக்காக் கண்டம் அவர்களுக்குள் பங்கு போட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, ராஜீய விஷயங்கள் பூகோள சாஸ்திரத்தில் எவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது புலப்படுகிறது.

ஒரு நாட்டின் செல்வ அபிவிருத்தி அந்நாட்டின் பூகோள நிலைமையையே பொறுத்தது. பூகோளம் படிப்பதினால்தான் ஒரு நாட்டின் உண்மையான செல்வநிலை தெரிகிறது. பல நாட்டின் பூகோளத்தை அறிவதினால் அவற்றைத் தன் நாட்டுடன் ஒப்பிட்டுப்பார்த்து, தன் நாடு எவ்விஷயங்களில் முன்னுக்கு வரலாமோ அவ்விதம் முன்னுக்கு வர இடமுண்டாகிறது. உலகத்தில் ஜெர்மானியும் அ. ஐ. நாடுகளும் செல்வ அபிவிருத்தியில் முன்னுக்கு வந்தது அந்நாட்டில் சாஸ்திரத்தில் கவனம் செலுத்தப்படுவதின் பயனாகும். அயல் நாட்டைப்பற்றி அதிகமாய்த் தெரிந்துகொண்டதால் அவர்கள் அதிகம் முன்னுக்கு வர இடமுண்டாயிற்று.

ஒரு நாட்டின் கைத்தொழிலும் வியாபாரமும் பூகோள சாஸ்திரம் படிப்பதால் விருத்தியடையக்கூடும். வியாபாரிகளுக்கு எந்த இடத்தில் எந்தப்பொருள் அதிகமாய்க் கிடைக்குமென்றும், அப்பொருள் எந்த இடத்தில் நன்றாய் விலையாகுமென்றும் நன்கு தெரிந்திருக்கவேண்டும். சாமான்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு எவ்வித சாதனத்தால் இலகுவாயும் அதிகச் செலவன்னியிலும் கொண்டுவரக்கூடுமென்றும், எந்தப் பாதை அதிக சுருக்கமான பாதை என்றும், அவர்கள் அறிந்து கொள்ளவேண்டுவது அவசியம். மேலும், ஒரு தொழில் நடத்துகிறவன், தான் செய்கிற கைத்தொழிலுக்கு வேண்டிய இயற்கைப்

பொருள் எங்கு அதிகமாய்க் கிடைக்குமென்று தெரிந்துகொள்ள வேண்டும். வேறு நாடுகளில் கைத் தொழில்கள் எவ்விதம் நடக்கின்றனவென்றும், அதற்கு என்ன இயற்கை சாதனங்கள் அடைந்துள்ளனவென்றும் அறியவேண்டும். இயந்திரங்கள் ஓட்ட நிலக்கரி மலிவாய்க் கிடைக்குமிடத்தில், நிலக்கரியையும், எண்ணெய் கிடைக்குமிடத்தில் எண்ணெயையும், நீர்வீழ்ச்சி இருக்குமிடத்தில் அதிலிருந்து உண்டாகும் சக்தியையும் உபயோகிக்க வேண்டும். இவ்விதம் பலவிடங்களிலும் நடக்கும் விஷயங்களை அறிந்திருந்தால்தான் ஒரு நாட்டின் கைத்தொழிலையும், வியாபாரத்தையும் விருத்திசெய்யக்கூடும்.

பூகோளம் படிப்பதனால் ஒருவனுக்கு தன் நாட்டின்மேல் அதிக அபிமானம் ஏற்படுகிறது. தன் நாட்டில் ஏழைகள் எவ்விதம் கஷ்டப்படுகிறார்கள் என்றும், தொழிலாளிகளின் சிரமங்கள் எவ்வளவென்றும் நன்றாய்த் தெரிந்துகொள்ளுகிறான். தன் நாட்டில் எவ்விதத் தொழில் நடக்கிறதென்றும், அவ்விதம் நடத்துவதில் ஏற்படும் இடையூறுகள் எவையென்றும் அறிகிறான். தன் நாட்டில் உண்டாகும் பொருளையே வாங்க விரும்புகிறான். இவ்விதம் சுதேச சாமான்களிலும் சொந்த தேசத்தனரிடத்திலும் ஒருவித அன்பும் அபிமானமும் ஏற்படுவதால் தன் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர தன்னாலான வரையில் முயற்சி செய்ய இடமுண்டாகிறது.

சுதேசாபிமானம் ஏற்படுவதால் அவன் அந்நிய நாட்டினரை வெறுக்கிறான் என்பதில்லை. அவன் பல தேசத்தின் நிலைமையைப் படிப்பதினால், சில உண்மைகளை அறிகிறான். அதாவது, பூகோள ரீதியாய்ப் பார்க்கப்போனால், ஒரு நாடு தனக்குவேண்டிய பொருள் இயற்கையோ, செயற்கையோ, யாவற்றையும் தானே தயார் செய்துகொள்வது அசாத்தியம். ஆகையால் தன்னிடம் அதிகம் ஏற்படும் பொருள்களை மற்ற நாட்டுக்குக் கொடுக்க வேண்டும். தன் நாட்டில் கிடைக்காமல் அந்நிய நாட்டில் அதிகமாய்க் கிடைக்கும் அல்லது தயாராகும் பொருள்களைத் தான் வாங்கிக்கொள்ளவேண்டும். இவ்விதம் ஒருவருக்கொருவர் அந்நியோன்னியமாயும், சிநேகபாவமாயும் வாழவேண்டும் என்னும் அவசியம் தெரியவருகிறது. மேலும் ஒவ்வொரு நாட்டின் ஜனங்களின் வாழ்க்கையைக் கவனிக்கும்போது, அவர்களிடம் ஓர் இரக்கமும், சகோதர வாஞ்சையும் ஏற்படுகிறது. உதாரணமாக: எஸ்கிமோக்கள் தூந்திரப்பிரதேசத்தில் வாழும் நிலைமையையும், அராபியர்கள் பாலைவனத்தில் படும் கஷ்டத்தையும், நீக்

ரோயர்கள் காங்கோ காட்டில் படும் துன்பத்தையும் தெரிந்து கொள்ளும்போது, நம்மை அறியாமலே நமக்கு ஓர் அன்பு உண்டாகிறது. ஆகையால் உலகத்திலுள்ள யாவரும் சகோதரர்கள் என்ற எண்ணம் விளங்குகிறது. எனவே சண்டைச்சச்சரவு என்பது ஒழிய இடமேற்படுகின்றது. இவ்விதமாக, ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படக்கூடும் பெரிய சண்டைகள் நிவர்த்திக்கப்படுகின்றன.

பூகோள சாஸ்திரம் படிப்பதால், பொதுவாகவே அறிவு அதிகப்படுகிறது. விஷயங்களை காரண காரிய சம்பந்தமாகப் படிப்பதனால் சிறுவருடைய யோசனு சக்தியும், பாவனு சக்தியும் அதிகப்படுகின்றன. சிறந்த புத்தியும் கூர்மையான அறிவும் வளர்க்கப்படுகின்றன. ஓர் தேசத்தின் பிற்கால நிலைமை முன்னுலே சொல்லக்கூடிய வன்மையும் ஏற்படுகிறது.

மேலும் இதுகளோடுமட்டும் நில்லாமல் ஒவ்வொரு தரமும் இயற்கையைப்பற்றி அறியும்பொழுது அதன் கர்த்தாவான கடவுளிடத்தில் அன்பும் பக்தியும் ஏற்படுகிறது. இயற்கையின் வன்மையும் மனிதனின் புன்மையும கவனிக்கப்படும்போது, கடவுளின் சர்வ வல்லமையான குணமும், அவரின் கருணையும் நன்கு விளங்குகின்றன. எனவே, பூகோளம் படிப்பதினுலேற்படும் நன்மைகளை பின்வருமாறு சுருக்கிச் சொல்லலாம்.

1. கிருஷிகன், வியாபாரி, உபாத்தியாயர், ராஜதந்திரி மாலுமி முதலிய யாவருக்கும் பொதுவாகப் பயன்படக்கூடியது.

2. தேச சரித்திரம், ராஜியநூல், செல்வ விருத்திநூல் முதலியவற்றைப் படிப்பதற்கு அடிப்படையாயுள்ளது.

3. ஓர் தேசத்தின் கைத்தொழில், வியாபாரம், செல்வ விருத்தி இவற்றை விருத்தி செய்யத் தூண்டுகோலாய் உதவுகிறது.

4. சுதேசாபிமானத்தையுண்டுபண்ணுகின்றது.

5. பிற தேசத்தாருடன் நட்புடன் வாழச்செய்து பெரிய போர்கள் நடவாவண்ணம் தடுக்க உதவிபுரிகிறது.

6. மக்களின் அறிவு யோஜனை பாவனுசக்தி முதலியவற்றை விருத்திசெய்கிறது.

7. கடவுளிடத்தில் பக்திகொள்ளும்படி செய்கிறது.

M. Krishnamurthi Aiyar, B A., L T,
Teacher,
R. C. B. & Trng. School, Trichinopoly.

182288
சென்னை-600 008

சந்தாதார் பக்கம்

[இத்தலைப்பின்கீழ் சந்தாதார் கேட்கும் கேள்விகள், கேள்விகளுக்கு அவர்கள் சொல்லும் விடைகள், அவர்கள் எழுதும் கடிதங்கள், வியாசங்கள் முதலியவைகளைப் பிரசுரிப்போம். எழுதுபவர்கள் இதற்கென்று பிரத்தியேகமான காகிதத்தின் இடது பக்கம் கொஞ்சம இடம்விட்டு காகிதத்தின் ஒரே பக்கத்தில் தெளிவாயும் சுருக்கமாயும் எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சந்தாதாரின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்திரவாதியல்லர்.]

கோபம் நீக்கி நற்குணம் கொள்க

"கோபம்" என்பது ஜீவராசிகளுக்கு ஏற்பட்ட ஓர் கொடுங்குணமாகும். இக்குணமானது, ஒருவன் தன்னிடம் நேரில் பேசும்பொழுது ஏற்படுகிற தகாத வார்த்தையினாலாவது, ஒருவன் தன்னைத் தூஷித்ததாகப் பிறரால் கேள்விப்பட்டபோதாவது, தன் பொருள் தான் வைத்திருந்த நிலைமை மாறி இருந்தபோதாவது, கொடுக்கல், வாஙகல் முதலிய காரியங்களில் மனஸ்தாபம் ஏற்பட்டபொழுதாவது, தான் சொல்லியதை ஏற்றுச்செய்யாமல், மாற்றிச்செய்வதைப் பார்த்தபோதாவது; "கோபம்" என்னும் இக்குணம் ஏற்பட்டுவிடுகிறது. இக்கடுமை வாய்ந்த "கோபம்" ஏற்பட்டால், ஒரு காரியமும் நடைபெற (முடிவு பெறவும்) ஏதுவாகாது. ஏனெனில் "கோப"க் குறியுள்ளவனிடம் எவரும் நெருங்கார். மனைவி, மக்கள்கூட சற்று விலகியே இருப்பர். குறித்த தொழில்கள் அனைத்தும் வெறுமனே கிடந்துவிடும். யாதாமொரு ஆபத்து நேர்ந்தபோதிலும், உதவிசெய்ய முன்வருவதற்கு எவரும் துணியார். இதையொட்டியே "ஆறுவது சினம்" எனவும், "முப்பழமொடு பாலன்னம் முகஞ் சுளித்திடுவாராகின், கப்பிய பசியினோடு கடும்பசி யாகுஞ்சாலே," எனவும் "கோபத்தால் வருங்கேடு கோடிகோடி" எனவும் அறிவிற் பெரியோர் கூறியிருக்கின்றனர்.

சிறு கதை

கோபமே குடிகொண்ட ஒருவன், தன் மகனைக் கூப்பிட்டு, "உன் தாய் வேண்டாம்; அவள் தவறுசெய்தாள்; உடனே காட்டில் கொண்டுபோய் அவளை வெட்டிவிடு," என்று கத்தியைக் கொடுத்தனுப்ப, அவன் மனங் கொதித்து, தாயை அழைத்துச் சென்று, ஓரிடத்திலிருத்தி, தனக்குள், "தாயாரைக் கொல்லு

கிறதா? தகப்பன் உத்திரவைத் தள்ளுகிறதா?'' என்று சிந்தித் திருக்கும் தருணத்தில், கோபங்கொண்டோன் கோபப்புழு ஓதுங் கினபின், தன் பக்கத்து வீட்டில், குடும்ப சந்தோஷமான வார்த் தைகளைப் பேசிக்கொண்டிருப்பதைச் செவியுற்று, மனம் துடித்து: "ஐயோ இன்னேரம் கொன்றிருப்பானே! நான் பெரும் பாத கத்துக்கு ஆளாகினேனே! என்ன செய்வேன்!'' என்று தட்டுத் தடுமாறி ஓடிப்பார்க்கையில், மனைவி இருக்கக்கண்டு, கூச்சலிட்ட ழுது, "இனி இக்குணத்தை அறவே ஒழிக்கவேண்டும்; கோபம் பாவம் சண்டாளம் என்பதையும் அறிந்தேன்'' எனத் தன்னை வெறுத்து வீடு வந்து சேர்ந்து, அதுமுதல் சாதுவாக இருந்து குடும்பத்தைப் போஷித்தான். ஆகையால் ஓர் காரியத்தைத் திடீரென்று ஆத்திரமூலமாக செய்துவிட்டால், அதாவது பின் னம் ஏற்பட்டால், அது பின்னம் பின்னமே ஒழிய பூரணமாகாது. நிற்க, அம்பலவாணக் கவிராயரவர்கள்:

"கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடிகெடுக்கும்;
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்;
கோபமே பொல்லாது, கோபமே சீர்கேடு,
கோபமே யுறவறுக்கும்;
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணைபோக்கும்;
கோபமே யீனமாம், கோபமே யெவரையுங்
கூடாமலொருவனுக்கும்;
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீய நர
கக் குழியினில் தள்ளுமாம்."

என்று முடித்திருக்கின்றனர். இச்செய்யுளை நோக்கும்பொழுது, இஃகோபத்தினால் ஏற்படுந்தீமை எவ்வளவென்று தோன்றுகிற தல்லவா?

மேலும், ஓர் அரசனுக்கு சாதுவின்றி, இக்கடுங்கோபம் ஏற்பட்டால், அவ்வரசனின் இராஜாங்கம் எவ்விதம் நடைபெறும்; குடிகள் எந்த நிலைமையில் ஈடுபட்டு வாழ்வார்கள்; என்பது சொல்லாமலே விளங்கும். ஆகவே,

"கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலும்
கடும்புலி வாழும் காடுநன்றே,'' எனவும், முதியோர் கூறி யிருக்கின்றனர். இதனை ஆராய்ந்து பார்க்கின், ஓர் அரசாங்கம் மட்டும் அல்ல, ஒவ்வொரு குடும்பத்திலும், சங்கத்திலும், வியா

பாரத்திலும், உத்தியோகத்திலும், கைத்தொழிலிலும் மேற்கூறிய வற்றால் அடையும் கேட்டையும் காட்டுகின்றது.

எவ்வித கஷ்ட நஷ்டத்துக்கும், பாவ புண்ணியத்தால் ஏற்படுகிற பலா பலன்களுக்கும், கோபத்தைக்காட்டாமல் நற்குணத்தை அமைதியுடன் அநுசரித்து நடந்தால், "தின்மையொழிந்து, நன்மை பெருகும்" என்பதில் சந்தேகமே இல்லை இதை விருத்திசெய்ய சிறுபருவத்திலிருந்தே ஈடுபட்டே வளர்ச்சி செய்து கொண்டுவரவேண்டும். எக்காரியமும் விருத்தி அப்பியாசிப்பதற்கு, "இளமைக்குணமே இறக்கும் வரையில்," "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுவரைக்கும்" எனவும், மேலோர் அருளிச் செய்திருக்கின்றனர்.

ஆதலால், நமது குடும்பத்தில் இந்நற்குணத்தைக் கையாளுவதுடன், நமது பாடசாலையில் கற்கும் மாணவர்களும், பழக்க வழக்கத்தால், ஒருவருக்கொருவர் சந்தோஷமாகவும், குளிர்ந்த மனதுடனும், உற்சாகத்துடனும் ஈடுபட்டுப் பழகுவார்களானால், இதனைக் கற்றுணர்ந்த பாலர்கள் தம் வாழ்நாளில், நற்குணசீலராய் வாழ்ந்து பெருமையடைவார்கள்.

T. S. S. ஆரோக்கியசாமி,
உபாத்தியாயர்,
உளுந்தங்குடி,
லால்குடி தாலுகா.

விடுகதை

காலே இரண்டுண்டு நடக்கறியாள்
இருகண்ணும் உண்டு
மேலே இமைத்து விழிக்கறியாள்
அந்த மெல்லி நல்லாள்
பாலோ குடிக்க வகையறியாள்.
நித்தம் பாக்குத் தின்பாள்
ஆலோசனை செய்து சொன்னவர்
புத்தி அதிகமதே.

D. செபஸ்தியான்,
ஹெட்மாஸ்டர்,
போர்டு ஸ்கூல், முத்தூர்.

விடைகள்

(1931-32 டிசம்பர், ஜனவரி மலர் 6, 7 பார்க்க)

1. யோசனுவிநத்தி விநத்தத்திற்கு விடை "அமிர்தம்"
2. யோசனைக் கணக்குக்கு விடை

D	1	2	C
6		E	5
A	4	3	B

விடுகதைகளுக்கு விடை

1. பட்டம்.
2. திருநெல்வேலி.
3. வருஷப்பிறப்பு.

சூ. ஆரோக்கியசாமி,
போர்டு பெண்பாடசாலை, மானமதுரை.

---

1. விருத்தம் விடை: "அமிர்தம்."
2. யோசனைக் கணக்கு

D	1	2	C
6		E	5
A	4	3	B

3. விடுகதைகள்

(1) கேட்கும் பக்ஷி: "பட்டம்"
(2) கேட்ட ஊர்: "திருநெல்வேலி."
(3) கேட்ட பூ: படிப்பு.

தெரேசம்மாள்,
VIII Std. pupil,
St. Ann's Night School,
Cantt,, Trichinopoly.

யோசனைக் கணக்கு

ஓர் புரவலன் தன் சைன்யத்தோடு, பதினொரு வாசல்களையுடைய நந்தவனத்தின்கண் புகுந்து, முதலாள் 1 பழம், இரண்டாவதாள் 2 பழம், மூன்றாவதாள் 3 பழமாக, இம்முறைப்படி யாவரும் பழங்கள் பெற்றுக்கொண்டு திரும்பினார்கள். வழக்கப்படி முதல் வாயில் காப்போன் வந்த மொத்த பழங்களில் பாதியை எடுத்துக்கொண்டான். பின்னர் 2-வது வாயில் காப்போன் மீதிப்பழங்களில் பாதியை எடுத்துக்கொண்டான். பின், முறையே முன்போல் பின்வந்த காவற்காரர்களும் அவர்கள் கொணர்ந்த பழங்களில் பாதியை எடுத்துக்கொள்ள, மீதிப் பழங்களில் சேனையிலுள்ளோர் ஆளுக்கு ஒன்று எடுக்க சரியாய்ப் போயிற்று. அப்படியானால், சைன்யத்தின் தொகை யாது? முதலில் வாங்கிய மொத்தப் பழங்களெத்தனை?

S. Durairaj Ignatius,
Secondary Senior.

182288

Permissu Superiorum.

St. Joseph's Industrial School Press, Trichinopoly.—1932